சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை கூட்டுறவு சங்கங்கள்.

*கு. கா. வி. எண். 40: திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு ஊர்கத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவை கூட்டுறவு சங்கம் ஒப்புதலளித்த பத்து தவிர மேலும் எத்தனை சங்கங்கள் ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளது?

(ஆ) எங்கெங்கு எந்தெந்த மாவட்டங்களில் ஆரம்பிக்கப் படும்?

(இ) அதற்கான அரசு பங்குத் தொகை எவ்வளவு அளிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் ஆ) 1980-81-ல் நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கும் பத்து சங்கங்களைத் தவிர இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கடலாடி பகுதியில் ஒன்றும் நிறுவப்படும். மேலும் சாத்தூர் பகுதியில் 3 சேவை சங்கங்கள் தாழ்த்தப்பட்டோருக்காக ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

(இ) தீப்பெட்டி தொழிற் கூட்டுறவு சேவை சங்கம் ஒவ்வொன்றுக்கும் அரசின் பங்கு மூலதனமாக ரூ. 25,000-யையும் மூலதனக் கடனாக ரூ. 2 இலட்சத்தையும் அரசு வழங்கும். ஒவ்வொரு சேவை சங்கத்திற்கும், அதனுடைய செயலாளராகப் பணி புரிய அரசின் செலவில் ஒரு பணியாளரை அரசு நியமிக்கும்.

[முற்பகல் 9.20]

திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் மத்திய அரசு அறிவித்த வரிச் சலுகையை பயன்படுத்திக் கொண்டு இத்தகைய தீப்பெட்டி கூட்டுறவு சேவை சங்கங்களை விரிவுபடுத்த அரசு உத்தேசித்துள்ளதா? ஆம் எனில். இப்படிப்பட்ட சேவை சங்கங்களை எந்தெந்த இடத்தில் நிறுவ இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அண்மையில் மத்திய அரசு அறிவித்த வரிச் சலுகையை யொட்டி, கூட்டுறவு விற்பனை சங்கங்களின் உறுப்பினர்களுக்கு தீப்பெட்டிகளுக்கு ஒரு குரோசிற்கு ஒரு ரூபாய் 60 காசு என்று மத்திய அரசு வரிச் சலுகை அளித்துள்ளது. அதனை யொட்டி தொழில், வணிக இயக்குநர் நம்

மாநிலத்தில் அந்த கூட்டுறவு பிரிவில் இனிமேல் நிறுவப்படும் தீப்பெட்டி சேவை சங்கங்களின் அமைப்பு பற்றி ஒரு கொள்கை முடிவெடுக்க விரிவான செயற் குறிப்பை அரசிற்கு அளித்திருக் றார். அதனையொட்டி அரசின் நிதி மற்றும் இதர வசதி களையொட்டி வளர்ந்து வரும் தொழிற்சாலைகளின் கோரிக் கையை நிறைவேற்ற எவ்வளவு சேவா சங்கங்கள் தேவையோ, அவ்வளவு சங்கங்களை அமைக்க தொழில் வணிக இயக்குநருக்கு அனுமதி அளிக்கலாம் என்றும் மற்றும் தேவையான சேவா சங்கங்களின் எண்ணிக்கையை அரசே முடிவு செய்யலாம் என்றும் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. அப்படிப் பட்ட பரிந்துரையின்படி 1980-81 ஆம் ஆண்டில் 20 தொழிற் கூட்டுறவு சேவை சங்கங்கள் மாவட்ட ரீதியாக கீழ்க்கண்ட இடங்களில் ஆரம்பிக்க அரசு பரிசீலனை செய்து கொண்டிருக் கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 12 கூட்டுறவுச் சங்கங்களும், திருநெல்வேலி மாவட்டத்தில் 5 கூட்டுறவுச் சங்கங்களும், தஞ்சை மாவட்டத்தில் 1 கூட்டுறவுச் சங்கமும், வட ஆற்காடு மாவட்டத்தில் 1 கூட்டுறவுச் சங்கமும், கோவை மாவட்டத்தில் 1 கூட்டுறவுச் சங்கமும், ஆக 5 மாவட்டங்களில் 20 கூட்டுறவுச் சங்கங்களை 22 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, 20,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கத்தக்க வகையில் இந்த முயற்சியை அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர் களின் மேலான கவனத்திற்கு பார்வைக்கு வைக்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விரிவான ஒரு பதிலைத் தந்தமைக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சிறிய தீப்பெட்டித்தொழிலின் அதிகமான எண்ணிக்கை கோவில்பட்டி யிலே சாத்தூருக்கு அடுத்துள்ள கோவில்பட்டியிலே இருக்கிறது. கடந்த ஆண்டு அதிகமான லைசென்ஸ் பெற்று, சிறிய உற்பத்தி யாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை பதிவு செய்யவேண்டுமென்று கேட்ட நேரத்திலே, ஒன்றுதான் பதிவு செய்யப்படும் என்று சொல்லி. பலருடைய கோரிக்கை மறுக்கப்பட்டது. அதன் காரணமாக அன்றைக்கு லைசென்ஸ் வாங்கியிருந்தாலும், மூலப் பொருள்களை விற்பனை செய்ய முடியாமல், அந்தத்தொழிலை நடத்த முடியாமல் இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொல்லும்போது திருநெல்வேலி மாவட்டக்திற்கு 5, முகவை மாவட்டத்திற்கு 12 என்று கூறினார்கள். திருநெல்வேலி மாவட்டத்திற்கும் அதிகமாக இந்தச் சங்கங்களை பதிவு செய்து கொடுக்கவேண்டும். காரணம், ஏற்கெனவே லைசென்ஸ் பெற்றி ருக்கிறார்கள், மேலும், இந்த சிறிய சிறிய உற்பத்தியாளர்களுக்கு அனுமதி வழங்கினால், வேலைவாய்ப்பு ஏற்படும். ஆகவே, முகவை மாவட்டத்திற்கு 12 என்று இருப்பதை போல் இல்லாமற் போனா லும், 10 வது நெல்லை மாவட்டத்திற்கு. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கு வாருங்கள், இப்போது வேண்டுகோள் வேண்டாம்.

திரு. சோ. அழகர்சாமி: நெல்லை மாவட்டததில், கோவில் பட்டியிலே இந்த சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு லைசன்ஸ் கொடுத்து, சங்கம் பதிவு செய்யப்படாமல் இருப்ப தால், 50 பேர்களுக்கு மேல் சேர்ந்து ஒரு சங்கத்தைப் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டால், பதிவு செய்து கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய செயற்குறிப்பில் இருக்கும் விவரத்தைத் தந்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான யோசனையை மனதில் கொண்டு உரிய தக்க நட வடிக்கை எடுக்கப்படும்.

திரு. பி. ஜி. நாராயணன்: அமைச்சர் அவர்கள் அறிவித்த சேவா கூட்டுறவு சங்கங்களைத் தவிர நடப்பு ஆண்டில் தமிழக அரசு வேறு சேவா சங்கங்களைத் துவக்க உத்தேசம் இருக்கிறதா? ஆம் எனில் விளக்கம் அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: ஏற்கனவே பதது சேவா கூட்டுறவு சங்கங்களை ஆரம்பிக்க முடிவு செய்ததோடு இந்த ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் கடலாடி பகுதியில் அரசு பங்கு மூலதனம் 25,000 ரூபாய். அவர்கள் மூலதனம் இரண்டு லட்சம் என்ற வகையில் சேவா சங்கங்கள் இயங்க வேண்டுமென்று நிபந்தனையுடன் நிறுவ ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. சாத்தூரில் இரண்டாவது முயற்சியாக முற்றி லும் அரிசனங்களுக்காக 57 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மூன்று சேவா சங்கங்களை நிறுவ செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது: நெல்லை மாவட்டத்தில் ஐந்து கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிக்க இருபபதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவற்றில் ஒன்றை கடைய நல்லூரில் ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: ஏற்கனவே பத்து சேவா கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கலாம் என்று அரசு பரிந்துரை செய்திருக்கிறது. அப்படி பரிந்துரை செய்த அந்த பத்து ஊர்களில் திருநெல்வேலி மாவட்டத்திலே மூன்று பகுதி களுக்கு அனுமதி அளிக்க பரிந்துரை செய்திருக்கிறது. அவை திருநெல்வேலி நகர், விளாத்திக்குளம் பகுதி புதூர், மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கடையநல்லூர் பகுதி ஆகியவற்றில் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்த பரிந்துரை செய்யப்பட்டிருக் கிறது. மேலும் ஏழு இடங்களில் சிவகெங்கை, ஸ்ரீபெரும் புதூர் மற்றும் ராஜபாளையம், வத்திராயிருப்பு, பழனியில்

ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், தொப்பம்பட்டி பகுதி, உசிலம்பட்டி பகுதி வல்லத்தூர், பெரியார் மாவட்டத்தில் ஒரு இடம், கோவை மாவட்டத்தில் ஒரு இடம் ஆக பத்து இடங்களில் துவக்கப்பட இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கடையநல்லூர் உட்பட பத்து இடங்களில் துவக்க அரசு பரிந்துரை செய்துள்ளது.

திரு. ச. பாலகிருஷ்ணன்: பெரியார் மாவட்டத்தில் எந்த இடத்தில் அமைய இருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பெரியார் மாவட்டத்தில் எந்த இடத்தில் என்பது அரசின் ஆய்வில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஊரில் அமைக்கப்படுமா என்று துணை வினாக்கள் கேட்க ஆரம்பித்தால் 234 உறுப்பினர்களும் கேள்வி கேட்க வேண்டிய நிலை ஏற்படும்.

திரு. மு. அம்பிகாபதி: தஞ்சை மாவட்டத்தில் இத்தகைய சிறு தொழில் துவங்க கலெக்டர் முருகராஜ் அவர்கள் முயற்சி எடுத்தார்கள். மன்னார்குடியில் அப்படி ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறதா? அதைச் செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மன்னார்குடி பகுதியில் இருக்கும் சிறு தீப்பெட்டி தொழில் உற்பத்தியாளர்களிடத்தில் இருந்து மனு வந்திருக்கிறது. நிச்சயமாக அனுதாபத்தோடு மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு பரிசீலனை செய்யும்.

பள்ளிகளில் நன்கொடை வசூலித்தல்.

*கு. கா. வி. எண். 41 திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

பள்ளிகளில் நன்கொடை வாங்கும் திட்டத்தைத் தடை செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் கட்டுப்பாடு சட்டம் 1973 மற்றும் விதிகள் 1974-ன்படி சிறப்பு மற்றும் அனுமதிக்கப்பட்ட கட்டணம் தவிர இதர கட்டணங்களோ நன்கொடைகளோ தனியார் பள்ளிகளில் வசூலிக்கக்கூடாது. மேலும் சிறப்பு மற்றும் அனுமதிக்கப்பட்ட கட்டணம் தவிர எந்தவிதமான நன்கொடையும் வசூல் செய்யக்கூடாது என்று கடுமையாக